# பாரதிதாசன் பல்கலைக்கழகம்
## (Re-accredited with "A+" Grade by NAAC)
பல்கலைப் பேரூர், திருச்சிராப்பள்ளி – 620 024.
தமிழ்நாடு, இந்தியா

அலுவலகம் : 0431-2407016, 2407060
தொலைப்படி : 0431-2407444
மின் அஞ்சல் : coe@bdu.ac.in
வலைத்தளம் : www.bdu.ac.in

முனைவர் க. துரையரசன், எம்.ஏ.,எம்.பில்.,எம்.எட்.,பி.எச்.டி.
தேர்வு நெறியாளர்


---

ந.க.எண்.தே.நெ.அ/தே.ம.சீ.கு.கூ./2019 நாள்: 03.12.2019

பெறுநர்:

அனைத்துக் கல்லூரி முதல்வர்கள்

பொருள்: பாரதிதாசன் பல்கலைக்கழகம் – தேர்வுக் கட்டணம் மற்றும் தீர்மானங்கள் - தெரிவித்தல் தொடர்பாக.

பார்வை: 1. ஆட்சிமன்றக்குழுக் கூட்ட தீர்மான எண் 2019.171
2. மாண்பமை துணைவேந்தர் அவர்களின் 22.11.2019 நாளிட்ட ஆணை

----

பார்வையில் கண்டுள்ள ஆணையின்படி, 13.11.2019 அன்று நடைபெற்ற 240-ஆவது ஆட்சிமன்றக்குழுக் கூட்டத்தின் தீர்மானம் எண் 2019.171-ல் ஒப்புதலளிக்கப்பட்ட தேர்வு தொடர்பான திருத்தியமைக்கப்பட்ட கட்டணம் மற்றும் நடைமுறைப்படுத்த வேண்டியவற்றை உடனடியாக நடைமுறைப்படுத்த ஏதுவாக தெரியப்படுத்தப்படுகிறது. இதனை தங்களது கல்லூரி தகவல் பலகையில் அனைவரும் பார்க்கும் வண்ணம் வெளியிடுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

1. நடப்புக்காலத் தேர்வில் தேர்ச்சியுறாத மாணவர்கள் உடனடித்தேர்வு 2 தாள்கள் என்பதற்குப் பதிலாக எந்தப் பருவத்தில் நிலுவைத்தாள்கள் இருந்தாலும் 1 தாள் மட்டும் அனுமதிக்கப்படும்.

2. பல்கலைக்கழகத் தரத்தேர்வில் மாணவர்கள் பங்கேற்பது தன்னாட்சி பெற்ற கல்லூரிகளிலிருந்து முதல் தரம் பெற்ற ஒவ்வொரு பாடப் பிரிவிலும் தலா ஒரு மாணவரும் தன்னாட்சி பெறாத அனைத்து கல்லூரிகளிலிருந்தும் பல்கலைக்கழகம் வெளியிடும் தரவரிசை பட்டியலில் உள்ள ஒவ்வொரு பாடப் பிரிவிலும் 1:5 என்ற அடிப்படையில் 1 (தன்னாட்சிக்கல்லூரி), 5 (பிற கல்லூரிகள்) மாணவர்கள் பங்கேற்க அனுமதிக்கப்படும்.

3. தேர்வுக்கட்டணம் தண்டத் தொகையுடன் செலுத்தவேண்டிய நாளுக்குப் பின்னர் பெறப்படும் விண்ணப்பங்களுக்கு நேரிடையாக தேர்வு நெறியாளர் அலுவலகத்தில் வந்து செலுத்தும் விண்ணப்பங்களுக்கு (போதுமான வருகைப்பதிவு உடைய மாணவர்களுக்கு கல்லூரி முதல்வர் கையொப்பமிட்ட உரிய வருகைச்சான்று அடிப்படையில்) கூடுதல் தண்டத்தொகையாக ரூ500/- +18% GST உடன் சேர்த்து விண்ணப்பங்களைப் பெற தண்டத்தொகையுடன் செலுத்தும் காலத்துக்குப் பிறகு மேலும் 7 நாட்கள் கால அவகாசம் வழங்கப்படுகிறது.

த.பி.பா

4. பல்கலைக்கழக இளநிலை, முதுநிலை செய்முறைத் தேர்வுகளுக்காக புறத் தேர்வாளர்களாக நியமிக்கப்படும் ஆசிரியர்கள் வருகையின்மை தீர்வு காணுவது தொடர்பாக. வருகை புரியாத ஆசிரியர்கள் அடுத்த ஒரு பருவத்திற்கு புறத்தேர்வாளராக செயல்பட அனுமதி மறுக்கப்படுகிறது.

5. விடைத்தாளின் நகல் (Transparency) பெற மாணவர்கள் விரும்புவோர் மட்டும் பெற்றுக்கொள்வது. **மறுமதிப்பீட்டிற்கு ஒளிநகல் பெறவேண்டிய அவசியம் இல்லை.**

6. மறு அச்சு/பெயர் திருத்தம்: நடப்பு மாணவர்களுக்கு கட்டணம் மதிப்பெண் பட்டியல் ஒன்றுக்கு ரூ200/- மட்டும்.

   பிற மாணவர்களுக்கு கட்டணம்: மதிப்பெண் பட்டியல் ஒன்றுக்கு ரூ200/- மற்றும் **தேடுதல் கட்டணம்:** ஒரே நேரத்தில் விண்ணப்பிக்கும் மதிப்பெண் சான்றிதழ்கள் அனைத்திற்கும் ஆண்டுக்கு ரூ100/- என்றும் அதிக பட்சம் ரூ2000/- என்றும் நிர்ணயிக்கப்படுகிறது.

7. ஆய்வியல் நிறைஞர் (M.Phil) அசல் நகல் சான்றிதழ் (Transcript) கட்டணம் ரூ.1000 (இந்தியாவிற்குள்) வெளிநாட்டிற்கு அனுப்பிடும் உண்மைத்தன்மை சான்றிதழுக்கான கட்டணம் 100/- U$ Dollar

3/12/19
தேர்வு நெறியாளர்

நகல்:

1. இயக்குநர், தகவலியல் மையம், பாரதிதாசன் பல்கலைக்கழகம், திருச்சி – 24
(இதனை பல்கலைக்கழக இணைய தளத்தில் வெளியிடுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது)